**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

தீ விபத்து கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்காக குடிசைக் காப்புறுதித் திட்டம் 1.5.99 முதல் 30.4.2000 வரை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு இத்திட்டம் நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்துறை

அரசாணை (நிலை) எண்.192 நாள் 6.4.2000

மீண்டும் படிக்க

1.அரசாணை நிலை எண்.1787 வருவாய் நாள் 21.9.1988

2.அரசாணை நிலை எண்.199 வருவாய் (இஇ1) நாள் 21.4.99

படிக்க

3. மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் (பொருளாதாரச் செயல்பாட்டுத்துறை) சிறப்புப் பணி அலுவலரின் கடிதம் எண்.64(83) இன்சூரன்ஸ் 1/99 நாள் 23.3.2000

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மத்திய அரசால் உருவாக்கப்பட்ட குடிசைக் காப்புறுதித் திட்டத்தை தமிழ்நாடு அரசின் மாநிலத் திட்டத்துடன் இணைத்து ஒன்றுக் கொன்று பயனாகவும், முரண்பாட வண்ணமும் 1.5.1988 முதல் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கெனச் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. குடிசைக் காப்புறுதித் திட்டத்தை அரசு அவ்வப்போது நீட்டித்து வருவதால் கடைசியாக 1.5.98 முதல் 30.4.99 வரை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டித்து மேலே இரண்டில் கண்டுள்ள அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள மைய அரசுக் கடிதத்தில் மத்திய அரசின் நிதி அமைச்சரின் சிறப்புப் பணி அலுவலர், இத்திட்டம் 1.5.99 முதல் 30.4.2000 வரை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். எனவே, தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கு குடிசைக் காப்புறுதித் திட்டத்தை 1.5.99 முதல் 30.4.2000 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிடுகிறது.

3. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், இத்திட்டத்தின் செயற்பாட்டினை ஆய்வு செய்து, 2000ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்கு மேல் இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்து முடிவு எடுப்பதற்கு ஏதுவாக அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1087/எப்.எஸ்/ப்பி /2000 நாள் 3.4.2000ம் மூலம் அத்துறை வழங்கப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ்குமார் கன்னா,<br>அரசு செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்

சிறப்பு ஆணையர் (ம) வருவாய் நிர்வாக ஆணையர்,சென்னை 5

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.